REGD.No. M. 6311 தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் [illegible] PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 26உ புதன் (12—10—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 27உ வியாழன் (13—10—55) [இதழ் 102

## விமானம் கக்கும் வாயு!

அடுத்த நூற்றாண்டில் ஜெட் விமானங்களும், ஹெலிகாப்டர்களும் செங்குத்தாக மேலே எழும்பும் என்றும், அவ்விமானங்கள் கக்கும் வாயு, கட்டிடங்களில் குழாய் மூலம் செலுத்தப்பட்டு குளிர் தெரியாமல் செய்ய வசதியாக இருக்கும் என்றும், பிரிட்டிஷ் ஐரோப்பிய விமான சர்வீஸ் தொழில் நுட்ப அதிகாரியான பீட்டர் மேஸ்பீல்டு என்பார் தெரிவித்திருக்கிறார்.

விமானத் தளத்தில் இவ்வாயுவைச் சேகரிக்க தனி வாயுக் களஞ்சியங்கள் கட்டப்படும் என்றார் அவர்.

# மாநிலக் குழு சிபாரிசுக்கு வேட்டு

## சிபாரிசை ஏற்க பீகார் மந்திரிசபை மறுப்பு

### இந்தியப் பேரரசிடம் முறையீடு

பாட்னா, அக். 11—

"பீகார் மாநிலத்தின் சில பகுதிகளை மேற்கு வங்கத்துடன் இணைக்கவேண்டும் என்ற மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசை ஏற்க முடியாது,"

—என்று, முதன் மந்திரி தலைமையில் கூடிய பீகார் மந்திரி சபை, ஒருமனதாக முடிவெடுத்திருக்கிறது.

மந்திரி சபையினர், குழுவின் சிபாரிசை தாங்கள் ஏற்றுக் கொள்வதற்கு இல்லையெனவும், எனவே, இந்தியப் பேரரசு அந்தச் சிபாரிசினை அமுல் செய்ய முற்படக் கூடாதெனவும் இந்தியப் பேரரசைக் கேட்டுக்கொள்வர் என்று தெரிகிறது.

மாநிலக் குழுவினர், தென் பீகாரில் உள்ள 'மான்பும்' மாவட்டத்திலிருக்கும 'பூருலியா' துணைப் பகுதியின் ஒரு 'தாணு' தவிர, இதர பகுதிகள், பூர்ணியா மாவட்டத்தில் மகாநந்தா நதிக்குக் கிழக்கில் உள்ள பகுதிகள் ஆகியவற்றை பீகாரிலிருந்து பிரித்து மேற்கு வங்க மாநிலத்துடன் இணைத்துவிட வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளனர்.

பூகோள, மொழித் தொடர்புகளின் அடிப்படையில் இந்தச் சிபாரிசு மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சிபாரிசினைத்தான், 'ஏற்றுக்கொள்ளமாட்டோம்' என்று, பீகார் காங்கிரஸ் மந்திரி சபையினர் முடிவு செய்திருக்கின்றனர்.

## 'சீக்கியரின் 'தலைவிதி'யை நிர்ணயிக்க எந்த சர்க்கார் குழுவாலும் இயலாது'

### 'பஞ்சாப் மொழி மாநிலம் பெற இறுதிவரை போராடுவோம்'

மாஸ்டர் தாராசிங் போர் முழக்கம்

அமிர்தசரஸ்—

"சீக்கியரின் 'தலைவிதி'யை நிர்ணயிக்க எந்த ஒரு குழுவினாலோ, சர்க்காராலோ நிச்சயம் முடியாது;

"பஞ்சாபி மொழி பேசும் மாநிலத்திற்காக, அகாலியர், இறுதிவரை போராடுவர்;

"வரும் அக்டோபர் 16-ந் தேதியன்று கூடும் சீக்கியர் மாநாட்டில், மாநிலக் குழுவின் சிபாரிசு பற்றி ஆராய்ந்து, மேற்கோண்டு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து முடிவு மேற்கொள்ளப்படும்,"

என்று, சிரோமணி அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங் முழங்கியிருக்கிறார்.

மேலும் அவர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சீக்கியர்கள், பஞ்சாப் மொழி மாநிலம் பெறுவதற்காகப் போராடுவதற்குத் தயாராயிருக்க வேண்டும்; ஆனால், மாநாடு முடிவு தெரியும்வரை சீக்கியர்கள் எந்தவித ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபடக்கூடாது;

"மாநில புனரமைப்புக் குழுவினர், பஞ்சாப், பெப்சு இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை ஒன்றாக இணைக்க சிபாரிசு செய்திருப்பதின் மூலம், சீக்கியருக்கு எதிரான மகாபஞ்சாப் கோரிக்கைக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கியிருக்கின்றனர்; இதனை சீக்கியர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்."

## ஐதராபாத் மந்திரி சபை...

### கொள்கை அளவில் ஏற்கிறது!

புதுடில்லி, அக். 11—

ஐதராபாத் மாநிலத்தைத் துண்டாட வேண்டும் என, மாநில புனரமைப்புக் குழு செய்துள்ள சிபாரிசினை மாநில சர்க்கார் கொள்கை அளவில் ஒத்துக்கொள்வதாக, முதன் மந்திரி பி. இராமகிருஷ்ண ராவ் தெரிவித்திருக்கிறார்.

குழுவின் சிபாரிசுகளை அமுல் செய்வதில் கடினமேதும் இருக்காதெனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

★

## கம்யூனிஸ்டு கட்சியின் கட்டளை

கட்டாக், அக் 11—

மாநில புனரமைப்புக் குழு சிபாரிசுகளை ஒட்டி நடைபெறும் எந்தக் கிளர்ச்சிகளிலும் கலந்து கொள்ளக் கூடாதென மாநிலக் கிளைகளுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு கட்டளை இட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## ஒரிசா மந்திரி சபை அதிர்ச்சி!

புவனேஸ்வரம், அக். 11—

குழுவின் சிபாரிசுகள் பெரும் அதிர்ச்சியைத் தந்திருப்பதாக, உதவி போலீஸ் மந்திரி நீலமணி ரௌத்ராய், ஒரிசா சட்டசபையில், கேள்வி நேரத்தின்போது தெரிவித்திருக்கிறார்.

"மாநிலத்திற்கு வெளியிலிருக்கும் ஒரிய மொழிப் பகுதிகளை ஒரிசாவுடன் சேர்க்கவேண்டும் என்று குழுவிடம் கோரப்பட்டிருந்தது; குழுவினர், அதுபற்றி எதுவுமே தெரிவிக்காது விட்டிருக்கின்றனர்" என்றும் அவர் வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

எதிர்க்கட்சியினர் பலரும், குழுவின் அறிக்கை எல்லா உறுப்பினர்களுக்கும் தரப்பட வேண்டும் என்பதுடன் குழுவிடம் சர்க்கார் தந்த அறிக்கையும் சீக்கிரமே வெளியிடப்படவேண்டும் என்றும் கோரியிருக்கின்றனர்.

## 'சம்யுக்த மராட்டியம் அடைந்தே தீருவோம்'

### 'குழு செய்த தவறுகளைத் திருத்துவோம்'

### சங்கர்ராவ் தேவ் போர் முழக்கம்

"சோதனை மிகுந்த இந்த நேரத்தில், நாம், நமது இலட்சியமான 'சம்யுக்த மராட்டியம்' அமைப்பதற்காகப் போராடுவதிலின்றும் ஓயமாட்டோம் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்;

"மராட்டிய பிரதேச காங்கிரஸ் குழுவினர், வரும் 21-ந் தேதியன்று மாநிலக் குழுவின் அறிக்கையைப் பரிசீலிக்கவிருக்கின்றனர்; அதற்கிடையில், மராட்டியம் அமைக்காததை எதிர்த்துக் கருத்தறிவிப்போர் அமைதியாக அதனைச் செய்ய வேண்டும்;

"மாநிலங்கள் அமைப்பதற்கு, மொழியை அடிப்படையாகக் கொள்ள முடியாது—என்று கூறும் மாநில சீரமைப்புக் குழு, தான் சிபாரிசு செய்துள்ள 16 மாநிலங்களில் 14 மாநிலங்களை மொழி அடிப்படையிலேயே அமைத்துள்ளது;

"அப்படியிருக்கும்போது, 'சம்யுக்த மராட்டியம்' அமைக்க சிபாரிசு செய்யாது விடுத்தது ஏன்—என்று, தெரியவில்லை.

"மராட்டியரின் நியாயமான கோரிக்கையை ஏற்றுக்கொள்கிற மனோ திடம் குழுவிற்கு இருக்குமென எண்ணியிருந்தோம்; ஆனால், குழுவினர், அறிவுக்கு ஒவ்வாத வாதங்களுக்கு ஆட்பட்டுவிட்டது வருந்தத் தக்கதாகும்; அவர்கள் செய்துள்ள பெரும் தவறைத் திருத்த, மராட்டிய மக்கள், ஜனநாயக ரீதியாக அமைதியாகப் போராடவிருக்கின்றனர்;

"சகல கட்சி சம்யுக்த மராட்டிய பரிஷத் ஏற்படுத்தியுள்ள ஒற்றுமையை நிலைநாட்டவும் பலப்படுத்தவும் மராட்டியர் முன்வந்தால்தான், அவர்கள், தங்களின் இன்பக்கனவான சம்யுக்த மராட்டியத்தைப் பெற முடியும்;

"அமைதியான ஆற்றலைப் பின்னணியாகக் கொண்ட மக்களின் விருப்பத்திற்கு மாறாக எதையும் நிர்ப்பந்தமாகத் திணித்துவிடமுடியாது என்பதை சம்பந்தப்பட்டோருக்கு மராட்டியர் உணர்த்தத்தான் போகின்றனர்,"

—என்று, அகில இந்தியக் காங்கிரசின் முன்னாள் பொதுச் செயலாளரும், சகல கட்சி சம்யுக்த மகாராஷ்டிர பரிஷத்தின் தலைவருமான சங்கர் ராவ்தேவ், அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

## மைசூர் மந்திரி சபையில் நெருக்கடி!

### ஐக்கிய கர்நாடக அமைப்பிற்கு எதிர்ப்பு

### 'இரண்டு கர்நாடக மாநிலங்கள் வேண்டும்'

மூன்று மந்திரிகள் அறிக்கை

ஐக்கிய கர்நாடக அமைப்பை ஒட்டி, மைசூர் மந்திரிசபையில் பிளவு ஏற்படும் என்று கூறப்படுகிறது.

சில நாட்களுக்கு முன்புதான், முதன் மந்திரி அனுமந்தையா, மைசூர் மகாராணி கல்லூரி மாணவரிடையே பேசுகையில், கடந்த நான்கைந்து ஆண்டுகளாகவே ஐக்கிய கர்நாடகம் அமைக்க வேண்டும் எனத் தாம் கோரி வருவதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனாலும், அவர் மந்திரிசபையில் உள்ள மூன்று பேர் ஐக்கிய கர்நாடக அமைப்பை இப்போது எதிர்ப்பதாகத் தெரியவருகிறது.

குழுவின் சிபாரிசுகளை ஒட்டி எழுந்துள்ள நிலையை மைசூர் மந்திரிசபை பன்முறை விவாதித்திருப்பதாகவும் கூறப்படுகிறது இப்போதைய சட்டசபையில் உள்ள உறுப்பினர்களில் சுமார் 40 பேர்வரை ஐக்கிய கர்நாடக அமைப்பை எதிர்ப்பதாகவும், அதற்காக ஒரு முன்னணி அமைக்கத் திட்டமிடுவதாகவும் கூறப்படுகிறது.

அந்த மூன்று மந்திரிகளும், தங்களின் எதிர்ப்பு நடவடிக்கையின் பின் விளைவுகளைத் தெரிந்துதான் உள்ளனர் என்றும். அவர்கள் அந்த விளைவுகளை அனுபவிக்கக் காத்திருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

கல்வி மந்திரியான இராமச்சந்திர ராவ், சுகாதார மந்திரியான சென்னையா, ரெவினியூ மந்திரியான கடிதால் மஞ்சப்பா ஆகிய மூவரும், ஐக்கிய கர்நாடகம் அமைப்பதில், முதன் மந்திரியின் கருத்திலிருந்து அடிப்படையிலேயே வேறுபடுவதாகத் தெரிகிறது.

இன்று, அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், மைசூர், தென் கன்னடம், கூர்ஜரம், கொள்ளேகாலம் ஆகிய பகுதிகளடங்கிய ஒன்றும், பம்பாய் மாநிலத்தின் கன்னடப் பகுதிகள், ஐதராபாத் மாநில கன்னடப் பகுதிகள் ஆகியவற்றை இணைத்து ஒன்றும் ஆக இரண்டு கன்னட மாநிலங்கள் அமைக்க வேண்டும் என்று கோருவதாக அறிவித்திருக்கின்றனர்.

முதன் மந்திரிக்கு வேண்டிய சிலர்கூட இந்த இரண்டு கர்நாடக மாநில கோரிக்கையை ஆதரிப்பதாகத் தெரிகிறது.

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 12—10—'55 புதன்


## இவர்களும் கண்டிக்கிறார்கள்!

"தீண்டாமை, அரசியல் சட்டப்படி ஒழிக்கப்பட்டுவிட்டாலும்கூட, இன்னமும் தீண்டாமை நாட்டில் நிலவத்தான் செய்கிறது; கிராமங்களிலும், நகர்ப்புறங்களிலும், புதிய புதிய முறைகளில் தீண்டாமை இன்னும் கைக்கொள்ளப்படுகிறது;

"தீண்டாமையை மேற்கொள்ளும் சிலர், அது தங்களின் மத நம்பிக்கையில் ஒரு பகுதி என்றே எண்ணிக்கொண்டிருக்கின்றனர்; இந்த நிலை வருந்தத்தக்கதாகும்;

"தாழ்த்தப்பட்டோருக்கு, இதர குடிமக்களைப்போலவே உரிமைகளும், வாழ்க்கை வசதிகளும் வழங்க மறுப்பது, 'கடவுளுக்கு எதிராகச் செய்யப்படும் பாபம்' என்பதை சாதி இந்துக்கள் உணருமாறு செய்ய வேண்டும்;

"சாதிப் பற்றைக் கைவிடுமாறு தூண்டுகிற இடைவிடாத பிரச்சாரம், மக்களிடையே மனமாற்றத்தை உண்டுபண்ண உதவும்; அந்த வகையில் நிச்சயமான நீடித்த பலனைப் பெற்றுத் தரும்; இப்படிப் பிரச்சாரத்தின்மூலம் சாதிப் பற்றை ஒழிக்கும் நடவடிக்கை—சீர்திருத்தம் படிப்படியாகத்தான் பலனைத் தரும்; வெளிப்படையாகப் பலன் தெரியாமல்கூட இருக்கலாம்;

"பொருளாதார அபிவிருத்தி மட்டிலும், சாதியக் கேட்டினை ஒழித்துவிட முடியாது; சமூக ஒழுக்கம் ஒரு புரட்சிகரமான மாறுதலுக்கு உட்பட வேண்டும்; பிரச்சினையின் இரு முகங்களும் ஒரேகாலத்தில் தாக்கப்பட வேண்டும்,"

என்று, கடந்த கிழமையில் ரிஷிகேஷ் நகரில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு விவாத அரங்கில் பேசிய இந்தியப் பேரரசின் உள்நாட்டிலாகா உதவி மந்திரி பி. என். தத்தார் பேசியிருக்கிறார்.

★

"நமது நாட்டின் முன்னேற்றத்தில் உண்மையிலேயே நாம் அக்கறை கொண்டிருக்கிறோம் என்றால், நாடு முன்னேறுவதற்குரிய ஒரே வழியான சாதிப் பாகுபாடுகளையும், பிரிவுகளையும் நாம் விட்டொழிக்க வேண்டும்;

"'பார்ப்பனர் ஒழிக'—என்ற குரல் தமிழ் நாட்டில் ஒரு பகுதி மக்களால் எழுப்பப்படுகிறது; நிச்சயமாக இது, பார்ப்பனரின் கடந்த காலப் போக்கின் எதிரொலியேயாகும்;

"'உயர்ந்தவர்' என்ற எண்ணத்தைத் தாங்களாகவே கைவிட்டுவிட்டு, சமூக இயக்கங்களின் நடைமுறையைப் புரிந்துகொள்ள 'உயர்ந்த நிலை'யிலிருப்போர் தவறிவிட்டால், வருந்தத்தக்க விளைவுகள் ஏற்படக்கூடும்,"

என்று, பண்டித நேரு கடந்த திங்களில் டில்லியில் காங்கிரஸ் நிர்வாகிகளிடை பேசுகையில் எச்சரிக்கை விடுத்ததாக செய்தி ஒன்று வெளியாகியது.

பண்டித நேரு அவர்கள், தமிழ் நாட்டில் கடந்த கிழமையில் சுற்றுப்பயணம் செய்தபோதும்கூட, ஊர் தவறாமல், சாதிக்கேடுகளைப் பற்றிப் பேசினார்.

இதேபோல உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் அவர்களும் சில நாட்களுக்கு முன்னர், சாதிக் கேடுகள் குறித்துப் பேசியிருந்தார்; அதுபற்றி நாம் ஏற்கனவே எழுதியிருந்தோம்.

இப்படிப் பலப் பல காங்கிரசாரும், தீண்டாமை ஒழிய வேண்டியதுபற்றியும், சாதிக் கேடுகள் அகல வேண்டிய அவசியம் குறித்தும் அவ்வப்போது பேசுகின்றனர்.

பொதுவாகவே, காங்கிரசாரின் நடவடிக்கைகளை உள்ளும் புறமுமாக உற்றுக் கவனித்து வரும் நாட்டவர்கள், சாதிக் கேடுகளைப் பற்றி அவர்கள் கூறிவரும் கருத்துக்களையும் கூர்ந்து நோக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தென்னாட்டைப் பொறுத்த மட்டில், திராவிடர் இயக்கத்தவர்தான், மக்களுடைய வாழ்க்கையில், அரசியல்—பொருளாதார அம்சங்களைப் பற்றி மட்டுமின்றி, சமூகத் துறை பற்றியும் கவலை கொண்டவர்களாக விளங்கி வருகின்றனர்.

அரசியல் சுதந்திரமும், பொருளாதார 'விடுதலை'யும் கிடைத்துவிட்டால் மட்டுமே மக்கள் முழு மனிதர்களாக ஆகிவிடமுடியாது என்ற கருத்தை நாம்தான் துணிவுடன் தெளிவாக எடுத்துச் சொல்லி வருபவர்கள்.

இந்தக் கருத்தினை, உள்ளத் தூய்மையுடன் நாட்டு மக்களிடத்தில் பரப்பியும் வருபவர்கள் நாம்.

இதரர்களெல்லோரும், எப்போதாவது சமயம் வாய்க்கும்போது, வளர்ந்துவரும் கால மாற்றங்களின் நிர்ப்பந்தங்களின் விளைவாகத் தவிர்க்க முடியாமல், 'சாதிகள் ஒழிய வேண்டும்—தீண்டாமைக் கொடுமை தொலையவேண்டும்,' என்று பேசுகின்றனர்.

என்றாலும், அவர்கள் அவ்வப்போது தெரிவிக்கிற கருத்துக்களுக்கு நாம் முக்கியத்துவம் தந்து, அவற்றை இங்கு இடைவிடாது விளக்குவதற்குக் காரணம், சாதிப் பாகுபாடுகளற்ற — ஏற்றத் தாழ்வற்ற ஒரு சமுதாயத்தைச் சமைக்க வேண்டும் என்பதில் நமக்குள்ள கவலையினால்தான்.

பண்டித நேரு, பண்டித பந்த், தத்தார் ஆகியவர்களெல்லாம் ஆட்சிப்பீடத்திலிருப்பவர்கள்.

பண்டித நேரு, பார்ப்பனருக்கு எச்சரிக்கை தரும் வகையில் பேசியிருக்கிறார்.

நாம் பன்னெடுங்காலமாகத் தெரிவித்துவரும் கருத்துக்களின் உள்ளடக்கத்திற்கு வேறு உருவம் தந்து, தங்கள் பாணியில் பேசியிருக்கின்றனர்.

இந்தக் கருத்துக்களை, 'இவர்கள் எல்லாம்கூட சாதிப் பாகுபாடுகளைக் கண்டிக்கின்றனர்' என்று தெரிந்து கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் — இப்போதைக்கு!

இவர்களது சொல்லுக்கும், செயலுக்குமிடையில் உள்ள வெளியையும், அவர்கள் சொல்லிலேயே இடத்திற்கு இடம் முரண்படும் போக்கினையும் பிறிதோர் சமயம் விரிவாக ஆராய்வோம்.

## இரயில்வே தொழிற் சங்க ஈடுபாடு குறித்து இரு கடிதங்கள்

★

தி. மு. க. பொதுச்செயலாளருக்கு

### தோழர் ஜி. பராங்குசம்

வரைந்தது

திருச்சி, 26—9—55

அன்புடையீர்!

"வணக்கம் பல; 'தென் பகுதி இரயில்வேமென் யூனியனி'ல் என்னையும், நம் கழகத்தைச் சேர்ந்த இரயில்வே தொழிலாளர்களையும் சேரவேண்டுமென்று அழைக்கிறார்கள்; அதில் நாம் சேரலாமா?—அல்லது, 'எந்தத் தொழிற் சங்கத்தில் ஈடுபட்டு வேலை செய்வது' என்று தெரியவில்லை. இரயில்வே தொழிற் சங்கங்களின் எண்ணிக்கையை வளர்த்துக்கொண்டு செல்வதைவிட, இருக்கும் தொழிற் சங்கங்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது என நம் கழகத் தோழர்கள் பலரும் சொல்லுகின்றனர். அப்படிப் பார்க்கும்போது, 'எஸ்.ஆர்.எம்.யூ.' ஏற்றது என்று கருதுகிறேன்; தங்கள் கருத்து அறிந்து மேற்கொண்டு நடக்க நானும், என்னைப் போன்ற பிற தோழர்களும் காத்திருக்கிறோம்.

"மேலும், சமீபத்தில் திருவண்ணாமலையில் நடைபெற்ற 'எஸ்.ஆர்.எம்.யூ.' பொதுக்கூட்டத்தில், நமது கழகத் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றியுள்ளார்கள் என்று பத்திரிகையில் பார்த்தேன்; அப்படிக் கலந்துகொள்ளலாமா என்பது பற்றியும் தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்."

ஜி. பராங்குசம்

தோழர் ஜி. பராங்குசத்திற்கு

### பொதுச்செயலாளரின்

பதில்

'அறிவகம்', சென்னை-13

10—10—55

அன்புடையீர்!

"வணக்கம்; தங்கள் 26—9—55-ஆம் நாளிட்ட முடங்கல் வரப்பெற்றேன்.

"தங்களைப்போலவே, இரயில்வே துறையில் வேலை செய்யும் ஏனைய திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாடுடைய தோழர்களும் 'எந்தத் தொழிற்சங்கத்தில் சேர்ந்து பணியாற்றுவது?' என்று, என்னை ஆங்காங்கு கேட்டவண்ணம் இருக்கிறார்கள்.

"பொதுவாகத் தொழிற் சங்கம், கட்சி அடிப்படையில் அமையாமல், 'தொழிலாளர் நலனையே முக்கியமாகக் கருதும் தொழிற் சங்க அடிப்படையில் அமைய வேண்டும்' என்பதைத்தான் நாம் அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம். அந்தக் கருத்தை என்றும் வரவேற்க நாம் முன்னணியில் இருக்கவே செய்கிறோம்; ஆனால், அப்படி ஒரு பொது இரயில்வே தொழிற்சங்கம் அமையும் சூழ்நிலை இப்பொழுது ஏற்படவில்லை.

"இரயில்வே தொழிற்சங்கங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கைக்கு மாறுபட்ட அரசியல் கட்சிகள் தம் ஆதிக்கத்தின் கீழ் வைத்து நடத்துவதால், அவற்றில் இணைந்து நின்று பணியாற்ற முடியாமல் தி. மு. கழகப் பற்றுடையோர் அவதியுறுகிறார்கள் என்பதை நானும் தெளிவாக உணர்கிறேன்.

"இப்பொழுது முக்கியமாக நான்கு தொழிற்சங்கங்கள் இரயில்வே துறையில் பணியாற்றி வருவதாக அறிகிறேன்; அவை, (1) லேபர் யூனியன்; (2) எம்பிளாயிஸ் அசோசியேஷன்; (3) எம்பிளாயிஸ் யூனியன்; (4) தென்பகுதி இரயில்வே மென் யூனியன்—ஆகும்.

"தொழிற் சங்கங்களின் எண்ணிக்கையை மேன்மேலும் வளர்ப்பதை விட இருக்கும் ஒன்றிலேயே ஈடுபடலாமா—என்று, கழகப் பற்றுடையோர் ஆங்காங்கு வினவுகின்றனர். பழக்கம் பெறுவதற்கும், பயிற்சிபெறுவதற்கும், இயன்றால் தொடர்ந்து வளர்ப்பதற்கும் அப்படி ஒரு தொழிற் சங்கத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுதல் நலம் என்றே நானும் கருதுகிறேன்.

"லேபர் யூனியன்—கம்யூனிஸ்டுக் கட்சியினரால் ஆதிக்கம் செலுத்தப்படுவதாக இருப்பதால், அதில் இணைந்து பணியாற்றுவது கழகத் தோழர்களுக்கு இயலாததொன்றாகும்.

"எம்பிளாயிஸ் அசோசியேஷன்—காங்கிரஸ் கட்சியினரால் நடத்தப்படும் 'ஐ. என். டி. யூ. சி.(I. N. T. U. C.)-யின் ஆதிக்கத்தின்கீழ் இருப்பதால் அதுவும் கழகப் பற்றுடையோருக்கு ஏற்பதாகாது.

"எம்பிளாயிஸ் யூனியன்—பெரும்பாலும் காங்கிரசுக்கு ஆதரவு தருபவராகவும், கழகக் கொள்கைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவராகவும் விளங்கும் தோழர் எஸ். குருசாமி அவர்களின்கீழ் நடைபெற்று வருவதால் அதிலும் கழகப் பற்றுடையோர் இணைந்து நின்று வேலை செய்ய இயலாது.

"தென் பகுதி இரயில்வே மென் யூனியனை(S.R.M.U.)—எடுத்துக்கொண்டால், அது ஒன்றுதான், கழகப் பற்றுடையோர் இணைந்து நின்று வேலை செய்வதற்கு ஏற்றதாக இருக்கிறது. இந்தத் தொழிற் சங்கத்தில் இதுவரையில் ஈடுபட்டிருப்போர் தி. மு. கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளுக்கு முரண்படாத ஒத்த கருத்துடையோராக விளங்கி வருகின்றனர். மற்றைய இரயில்வே தொழிற் சங்கங்கள், தொழிலாளர்களின் பொருளாதார நிலையை மட்டும் கவனிக்க ஏற்பட்டனவாக இருக்கின்றன; ஆனால், எஸ். ஆர். எம். யூ. தொழிலாளர்களின் சமூக வாழ்வு பகுத்தறிவு நெறியில் திருப்பப்பட வேண்டும் என்ற சமுதாயச் சீர்திருத்தக் கொள்கையோடு, பொருளாதார நிலையையும் கவனிக்க ஏற்பட்டதாக விளங்கி வருகிறது. மேலும், தி. மு. கழகப் பற்றுடையோர் சிலர் ஆங்காங்கு இந்தத் தொழிற் சங்கத்தில் இதுவரையில் ஈடுபாடு கொண்டிருந்து, ஏற்புடைத்தான முறையில் அமைதியாகவே பணியாற்றி வந்திருக்கின்றனர். இந்தத் தொழிற் சங்கத்தைச் சார்ந்த முக்கியமானவர்களோடு நான் உரையாடிப் பார்த்தபோது, தி. மு. கழகப் பற்றுடையோர் இணைந்து நின்று அமைதியாகப் பணியாற்றுவதற்குரிய ஒத்த சூழ்நிலை இருக்கக் கண்டேன்.

"எனவே, தாங்களும், தி. மு. கழக ஏனைய தோழர்களும், எஸ். ஆர். எம். யூனியனில் இணைந்து நின்று பணியாற்றி, பயிற்சியும் பழக்கமும் பெற்றுக் கொள்ளுங்கள்; தி. மு. கழகத் தோழர்களும், கழகச் சொற்பொழிவாளர்களும், தொழிற்சங்க ரீதியில் இந்தத் தொழிற்சங்கத்தில் ஈடுபட்டு பணியாற்றலாம், வளர்ந்துவரும் சூழ்நிலைக்கு ஏற்ப மாநில மாநாட்டில் திட்டம் தீட்டிக் கொள்ளலாம்.

"தங்களுக்கு நான் எழுதியுள்ள இந்தக் கருத்தையே, தெளிவு பெற விரும்பும் நம் கழகத் தோழர்கள் அனைவருக்கும் கூறவும்."

அன்பன்,

இரா. நெடுஞ்செழிய[ன்]

## 147 வயது தந்தைக்கு 120 வயதான மகள்!

ரஷ்யாவில் ஒரு குடும்பம்

மாஸ்கோ, அக். 10—

அஜர்பைஜானில் உள்ள ஒரு மலைக் கிராமவாசியான மக்முத் எய்வாஜோவ் என்பவர், அண்மையில், தமது 147-வது பிறந்த நாளைக் கொண்டாடினாராம்!

அஜர்பைஜான் பகுதியிலேயே அவர்தான் அதிக வயதானவராம்!

மக்மூத், கால்நடைகளை மேய்த்து வாழ்க்கை நடத்துகிறாராம்!

அவரது 152 பேரன் பேத்திமார்களுடன் வேலை செய்து, கூட்டுப்பண்ணை ஒன்றை அவர் நிறுவியிருக்கிறாராம்; அவருக்கு 23 குழந்தைகள் உள்ளனர்; மூத்த பெண்ணிற்கு சுமார் 120 வயதாகிறது!

அண்மையில், மக்முத், மாஸ்கோவிற்கு வந்து, முக்கிய இடங்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறார்.

## வளரும் விஞ்ஞானம்!

மனிதக் குரலை ஒலிபரப்ப மனிதக் குரலினாலேயே இயக்கும் சிறிய ஒலிபரப்பு இயந்திரமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

இதனை டெலிபோனிலோ, சட்டைப் பையிலோ, சிறு பையிலோ பொருத்திக் கொள்ளலாம்: மனிதக் குரலின் சக்தியாலேயே இயக்கும் இதற்கு வேறுவிதமான சக்தி ஒன்றும் தேவையில்லை.

வயல்களில் விவசாயிகளும், பெரும் நிகழ்ச்சிகளில் பத்திரிகைநிருபர்களும், போலீஸ்காரர்களும் இதனை உபயோகிக்கலாம்.

# மாநில சீரமைப்புக்கான காரணங்கள்

## குழுவினர் தெரிவித்துள்ள கருத்துக்கள்

"இந்திய யூனியனில் தற்போதுள்ள மாநிலங்களின் அமைப்பானது, ஓரளவுக்குத் தற்செயலாகவும், இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி அதிகாரம் வளர்ச்சியடைந்து வந்ததை ஒட்டி ஏற்பட்ட சூழ்நிலை காரணமாகவும் ஏற்பட்டதாகும்; ஓரளவுக்கு, முன்னைய 'இந்திய சமஸ்தானங்கள்' யூனியனில் இணைந்துவிட்ட வரலாற்று நிகழ்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், இந்தியாவை 'பிரிட்டிஷ் மாகாணங்கள்' என்றும், 'இந்திய சமஸ்தானங்கள்' என்றும் பிரித்ததுங்கூட தற்செயலாய் ஏற்பட்ட நிகழ்ச்சிதான். இதற்கு, இந்திய வரலாறுபூர்வமான காரணம் எதுவும் கிடையாது. 'மாகாணங்'களின் அமைப்பானது, நிர்வாக வசதி, பொருளாதார அடிப்படை, இராணுவ நடவடிக்கை ஏற்பாடுகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவைகளைப் பொறுத்தே உருவாகியிருந்தது. நிர்வாகப் பிரிவுகளின் எல்லைகள் ஏதாவது நோக்கத்துடனே, அல்லது இப்படி இருக்க வேண்டுமென்று உத்தேசித்தோ வகுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்களிலுங்கூட, அப்பிரிவினை, பிரிட்டனுடைய நலனைக் கருதியோ, அல்லது ஒரு அந்நிய ஆட்சிக்கிருந்த தேவைகளைக் கருதியோதான் செய்யப்பட்டதே தவிர, மக்களுக்கு இருந்த உண்மையான தேவைகளையோ, அவர்களின் விருப்பங்களை அல்லது உறவுகளையோ, கருதிச் செய்யப்படவில்லை;

### 'காலதாமதம் கூடாது!'

"இந்திய அரசியலமைப்புப் படத்தை மாற்றி எழுத வேண்டிய பொறுப்பை இப்போதே மேற்கொள்ளுவதுடன், தவிர்க்கத்தக்க காலதாமதத்திற்கு இடங்கொடாதபடி, சீக்கிரமாக நிறைவேற்றி வைக்கவும் வேண்டும்; இப்போது செய்யப்படுகிற மாறுதல்கள் இந்திய மக்களில் கணிசமான பெரும்பான்மையினருக்கும் திருப்தியை அளிக்கும் என்ற நம்பிக்கையில் நாம் அவ்வாறு செய்யவேண்டும்;

### 'மாறுதல்கள் எதையும் செய்யவே கூடாது'

"ஒரு உத்தேச மாறுதலானது தற்போதுள்ள நிலைமையிலிருந்து நிச்சயமான அபிவிருத்தியாக இருந்தால் அன்றியும்; குழு கவனிக்கவேண்டிய நோக்கமாக இந்திய சர்க்கார் விதித்துள்ளபடி—'தேசம் முழுவதின் நலமும், தேசத்திலுள்ள ஒவ்வொரு அரசியல் அங்கத்திலும் அடங்கிய மக்களின் நலமும்' ஒருங்கே அபிவிருத்தியடைய வேண்டும் என்ற நோக்கம் நிறைவேறுகிற முறையில் அதன் மூலம் கிடைக்கக்கூடிய பலன்கள், தற்போதுள்ள பிரிவுகளைத் திருத்தி அமைப்பதால் தேசத்தின் நிர்வாக, நிதி ஆதாரங்கள் மீது சுமந்துவிட நேருகிற பெரும் பளுவை ஈடு கட்டக்கூடிய பலன்களாக இருந்தால் அன்றியும், அத்தகைய மாறுதல் எதையும் செய்யவே கூடாது;

"மாநிலங்களை, மொழி, அல்லது கலாச்சாரம் ஆகிய ஒரே ஒரு அடிப்படையில் பரிசீலித்துத் திருத்தியமைப்பது சாத்தியமுமல்ல—உசிதமுமல்ல என்று குழு கூறியிருக்கிறது."

### 'அதிக முக்கியத்துவம்' கிடையாதாம்!

"மாநில சீரமைப்புப் பிரச்சினையில், மக்களின் விருப்பம் ஒரு முக்கிய அம்சமாகக் கவனிக்கப்பட வேண்டும்; ஆனால் அதை இதர முக்கிய அம்சங்களோடு சேர்த்தே கவனிக்க வேண்டும். பல்வேறு பிரதேசங்களும், முன்பு, 'சரித்திர ரீதியில் எவ்வாறு தொடர்பு கொண்டிருந்தன' என்பதைவிட, 'இப்போது 'ஒரு பிரதேசத்தில் நிலவும் நிலைமை என்ன?' என்பதுதான் அதிக முக்கியம்; ஆகையால், சரித்திரத்தைக் காட்டிக் கூறப்படும் வாதங்களுக்கு அளவு மீறிய முக்கியத்துவம் அளிக்க முடியாது. நிர்வாக வசதியைக் கவனித்தால், ஒரு பிரிவின் பகுதிகளிடையே பூகோள ரீதியில் தொடர்பு இருக்க வேண்டும் என்பது முக்கியமாகும். "பூகோள ரீதியான இதர அம்சங்கள் இரண்டாம் தர முக்கியத்துவம் உள்ளவைதான்."

### சலுகைகள் பாதிக்கப்பட மாட்டாதாம்!

அரசியல் அமைப்புச் சட்டத்தில் 371-வது பிரிவை விட்டுவிடுவதின் மூலம், 'பி' பிரிவு மாநிலங்களை 'ஏ' பிரிவு மாநிலங்களுக்குச் சமமானவையாக ஆக்கிவிடலாம். நாட்டின் ஜனநாயகக் கட்டுக்கோப்புக்குப் பொருத்தமாயில்லை என்ற காரணத்தால் பொதுமக்களில் பெரும்பாலானோர், 'இராஜப் பிரமுகர்கள்' பதவி நீடிப்பதை விரும்பவில்லை; எனவே 'இராஜப் பிரமுகர்'கள் பதவி ரத்து செய்யப்படவேண்டும். அவ்வாறு ரத்து செய்வதற்கு, பொதுமக்கள் விருப்பம் தவிர, வேறு பல முக்கியக் காரணங்களும் இருக்கின்றன. 'இராஜப் பிரமுகர்'களாகப் பதவி வகிக்கிற மன்னர்களின் உரிமைகளும், சலுகைகளும், அப்பதவிகளை ரத்து செய்வதின் மூலம் வெகுவாகப் பாதிக்கப்பட மாட்டாது."

### 'சி' பிரிவு மாநிலங்கள் தனித்தியங்க முடியாது!

'சி' பிரிவு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், அந்த மாநிலங்களின் தற்போதைய அமைப்பு முறை திருப்திகரமாயில்லை என்பதுதான் மக்களின் பொதுவான கருத்து. இந்தச் சிறிய பிரிவுகள் இனிமேலும் பொருளாதார ரீதியில் சமநிலையற்றதாகவே இருக்கும். நிதி விஷயத்தில் பலக்குறைவானவையாகவே இருக்கும்; அத்துடன், நிர்வாகத் துறையிலும், அரசியல் துறையிலும் ஒரு நிலையான தன்மையற்றதாகவே இருக்கும். எனவே, இதனால் ஏற்படுகிற நிதி, நிர்வாக, அரசியல் துறைக் கஷ்டங்களை ஈடு செய்யக்கூடிய பலன் எதுவுமில்லையாகையால், மத்திய சர்க்காரால் நிர்வகிக்கப்படப் போகிற இரு மாநிலங்களைத் தவிர, மற்ற 'சி' பிரிவு மாநிலங்களை அருகிலுள்ள மற்ற மாநிலங்களுடன் இணைப்பதுதான் இப்பிரச்சினைக்குப் பரிகாரம்."

### மாநில நிர்வாக மொழி

#### மத்திய சர்க்கார் நிர்ணயிக்க வேண்டுமாம்!

மாநில சர்க்கார் நிர்வாகங்களில் பல கட்டங்களில் பல மொழிகளின் உபயோகம் எந்த வகையில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி நிர்ணயம் செய்யும் தெளிவானதோர் விதி முறையை, மாநில சர்க்கார்களைக் கலந்துகொண்டு, இந்திய சர்க்கார் வகுக்க வேண்டும்; இந்த விதிமுறை பின்பற்றப்படும்படி உறுதி செய்வதற்காக, 347-வது பிரிவுப்படி, நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேலும், குடியிருப்பு சம்பந்தமான தேவைகள் பற்றிய விதிகளை எளிதாக்கவும், தளர்த்தவும், அரசியலமைப்புச் சட்டத்தின் 16(3)-வது பிரிவுப்படி இந்திய சர்க்கார் சட்டமியற்ற வேண்டும்.

### பரீட்சை எழுதுவதற்கான மொழி

#### சுயமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்!

"மாநில சர்க்கார்களின் இலாகாக்களில் உத்தியோகங்களுக்காக நடத்தப்படும் பரீட்சைகளில் பதில் எழுதுவதற்கான மொழியாக, ஒரு அபேட்சகர், தன் சுயஇச்சையாக, மாநிலத்தின் முக்கியமான மொழியைத் தவிர, யூனியன் மொழிகளான ஆங்கிலத்தையோ, அல்லது இந்தியையோ, அல்லது குறிப்பிட்ட மாநிலத்தின் மக்கள் தொகையில் சுமார் 15 முதல் 20 சத விகிதமோ, அதற்கு மேற்பட்டோ உள்ள ஒரு சிறுபான்மை மக்களின் மொழியையோ தேர்ந்தெடுத்துக்கொள்ள உரிமை இருக்க வேண்டும்.

### நிதிப் பிரச்சினை

"விவரமான பரிசீலனை ஒன்று நடைபெறுவதற்கு முன்னர், ரெவினியூ அல்லது மூலதனக் கணக்கில் கொடுக்கப்படும் பண உதவிகளும், நீண்டகாலக் கடன்களும் கூடுமானவரை இப்பொழுதுள்ள அடிப்படையிலேயே புதிய 'யூனிட்'டுகளுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

"நிதிக் குழு, நிலைமையைப் மறுபரிசீலனை செய்யும் காலம்வரை கொடுக்கப்படும் தொகைகள் புதிய 'யூனிட்டு'களுக்குத் தொடர்ந்து மக்கள் தொகை விகிதாச்சாரத்தில் கொடுக்கப்பட்டு வரவேண்டும்.

### மாநிலங்களுக்கிடையே உடன்பாடுகள்

"தண்ணீர் உரிமைகள் சம்பந்தமாக மாநிலங்களுக்கிடையே இப்பொழுதுள்ள உடன்பாடுகள், அவைகள் ஏற்பட்டதற்கான பரந்த அடிப்படைக்குரிய மதிப்புக்கொடுக்கப்பட்டு, மேலும் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாக இருக்கலாம். சீரமைப்பு சம்பந்தமான விஷயங்கள் முடிவு செய்யப்பட்டதற்குப் பின் கூடுமான விரைவில் இப்பிரச்சினையை மறுபடியும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்."

### புகார்களை விசாரிக்க நிரந்தர அமைப்பு

"சில பிரதேசங்கள் அலட்சியம் செய்யப்பட்டுவிட்டன வென்று கூறப்படும் புகார்களை விசாரிப்பதற்காக, திட்டக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட நிரந்தர அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும்.

"அபிவிருத்திச் செலவு, நியாயமான முறையில் நாடு முழுதும் பரவலாக இருக்கும்படி செய்வதற்காக, இந்தியா பூராவுக்குமான ஒரு தொழில் இடக் கொள்கையை வகுக்கும் பிரச்சினை பற்றியும் இந்திய சர்க்கார் ஆலோசிக்க வேண்டும்."

### தென்னாட்டு மொழிகளைக் கற்க வேண்டுமாம்!

"அனைத்திந்திய சர்வீசுகளுக்கும், இதர சர்வீசுகளுக்கும் நடைபெறும் போட்டிப் பரீட்சைகளில் இந்திக்கு அங்கீகாரம் அளிக்கும் கொள்கையை வகுப்பதில், இதர இந்திய மொழிகளைப் படிப்பதையும்—குறிப்பாகத் தென்னிந்திய மொழிகளைக் கற்பதற்கு ஊக்கமளிக்கப்பட வேண்டியதின் அவசியம் மனதிற்கொள்ளப்பட வேண்டும். அத்துடன், ஒவ்வொரு மாநிலத்திலுள்ள உயர் நீதிமன்ற நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினராவது, அந்த மாநிலத்துக்கு வெளிப்பட்டவர்களாக நியமிக்கப்பட வேண்டும்"

### ஆங்கிலத்தின் இறுதிக் காலம்?

"இந்தியும், பிரதேச மொழிகளும் ஆட்சி மொழிகளாகவும், கல்வி போதனா மொழிகளாகவும் மேற்கொள்ளப்பட்ட பின்னருங்கூட, கொஞ்சகாலத்துக்கு பல்கலைக் கழகங்களிலும், உயர்தரக் கல்வி நிறுவனங்களிலும் ஆங்கிலம் தொடர்ந்து முக்கிய இடத்தை வகித்துத்தானிருக்க வேண்டும்.

"உஸ்மானியா பல்கலைக் கழகம் மத்திய சர்க்காரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்; இதில், போதனா மொழி இந்தியாக இருக்கவேண்டும். இன்னும் தெற்கே மற்றொரு மத்திய பல்கலைக் கழகம் நிறுவப்படவேண்டும்; வட நாட்டில் தென்னிந்திய மொழிகளைக் கற்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்."

### 'இந்தியாவின் ஒற்றுமை'

"மாநிலங்கள் சீரமைக்கப்பட்டாலும் சரி, சீரமைக்கப்படாவிட்டாலும் சரி, இவைகள், உண்மையான அரசியல் நிறுவனமும், தேசியத்துக்கே ஆதாரமானதுமான யூனியனின் பகுதிகளாகவே இருந்தன; இனியும், அப்படியே இருக்கப் போகின்றன. மேலும், இந்தியாவின் அரசியலமைப்பு, ஒரே ஒரு குடியுரிமை நிலைமையைத்தான் அங்கீகரித்திருக்கிறது; அதுதான் இந்திய மக்களுக்கெல்லாம் பொது குடியுரிமை நிலை இதன்படி யூனியன் முழுமையிலுமே ஒவ்வொரு குடிமகனுக்கும் சம உரிமைகளும், வாய்ப்புகளும் வழங்கப்பட்டிருக்கிறது.

## 'அணு மழை'ச் சோதனையாம்!

வாஷிங்டன், அக். 10—

நிவாடாவில் அடுத்த திங்களில் அமெரிக்கா புது அணு ஆயுதச் சோதனைகளை நடத்துமாம்!

'அணுமழை'ச் சோதனையும், அவற்றில் ஒன்ருயிருக்குமாம்!

## இந்தியாவின் தேசீய வருமானம்

பாட்னா, அக். 10—

"முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய பின்பு, இந்தியாவின் தேசிய வருமானம், 17 சத விகிதம் உயர்ந்துவிடும்," என்று, நிதி மந்திரி தேஷ்முக், மாணவர் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இரண்டாவது திட்டத்திற்கு இது நல்ல துவக்கமாயிருக்கும் என்றும், 1978-ம் ஆண்டுக்குள், தேசீய வருமானம் இரட்டித்துவிடும் என்று தான் எதிர்பார்ப்பதாயும் நிதி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

## அவர் கருத்து!

சவந்தவாடி, அக். 10—

"நான் இங்கு எல்லாவற்றையும் நேரில் கண்டேன்; கோவாவில் சிறிதும் காலனி ஆதிக்க அறிகுறியே காணப்படவில்லை; அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் எவருக்கும் அநீதி இழைக்கப்படுவதாகக் காணப்படவில்லை,"

என்று, அண்மையில் இங்கு வந்த பாகிஸ்தான் தலைவர்களுள் ஒருவரான சுரவர்த்தி கூறியிருக்கிறாராம்.

அவர் கோவாவிலிருந்து விமான மூலம் கராச்சி புறப்பட்டார் என்று கோவா வானொலி அறிவித்திருக்கிறது.

அவரது கருத்தைப் பெரிதும் பாராட்டிய அந்த வானொலி, 'சுரவர்த்தியின் பாரபட்சமில்லாத கருத்து கோவா பற்றிய போர்ச்சுகீசியரின் கொள்கையை உலகம் மதிப்பிடப் பெரிதும் பயன்படும்,' என்றும் குறிப்பிட்டதாம்.

சுரவர்த்திக்கு கோவாவில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டதாகவும், மசூதிகளெல்லாம் புதிதாக வெள்ளையடித்து அலங்கரித்து வைத்திருந்தனர் என்றும் கூறப்படுகிறது.

## குழு அறிக்கை: பலரின் கருத்துகள்

### மாதவராவ்

மைசூரின் முன்னாள் திவானான என். மாதவ ராவ் என்பார், "மாநிலக் குழுவின் அறிக்கை, 'பிரத்தியட்ச' நிலைக்கு மாறுபட்டது," என்று கருத்தறிவித்திருக்கிறார்.

சிபாரிசுகள், அரசியல், நிர்வாக, இடையூறுகள் பலவற்றை உருவாக்கும் என்றும், எழவிருக்கிற தகராறுகள் நிச்சயம் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும் என்றும் தெரிவித்திருக்கிறார்.

### கடிலிங்கப்பா

கர்நாடக செயற்குழுத் தலைவரான கடிலிங்கப்பா, 'பெல்லாரியின் மூன்று தாலுகாக்களை மீண்டும் ஆந்திரத்துடன் இணைத்திருப்பது மக்களின் விருப்பத்தையும், சரித்திர உண்மைகளையும் ஒதுக்கிவைத்துவிட்ட செயலாகும்; மேலும், அது, கன்னடியருக்கு இழைக்கப்பட்டிருக்கும் பெரும் அநீதியுமாகும்," என்று குறிப்பிட்டார்.

### என். சி. சாட்டர்ஜி

"இந்திய மாநிலங்கள், பெருமளவில், புரட்சிகரமாக மாற்றியமைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது; ஆனால், குழுவின் அறிக்கை, ஆளும் கட்சியினரின் ஆதிக்கம் நீடிக்க ஒரு அரசியல் சரிக்கட்டு வேலையாகவும், உத்தரப் பிரதேசத்தின் 'சுரோயக' ஆதிக்கத்திற்கு உறுதி தருவதாகவுமே அமைந்திருக்கிறது; மராட்டியரின் கோரிக்கைகள் ஏன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்குக் காரணம் என்னவென்பது எனக்குப் புரியவில்லை; நீதிபதி ஒருவரின் தீர்ப்பைத் திருப்பிப் படிக்கவேண்டிய அவசியம், ஓராண்டு காலத்திற்குள்ளாக பெல்லாரி விஷயத்தில் ஏன் வந்தது என்று தெரியவில்லை; இரண்டு தெலுங்கு மாநிலங்களுக்கு என்ன அவசியம்? வட இந்தியாவின் செல்லப்பிள்ளையான மாநிலத்திற்கு, இரண்டு தெலுங்கு மாநிலங்களும் ஒன்ருக அமைந்தால் ஒரு செல்வாக்கு மிகுந்த பலமான எதிரியாகிவிடக்கூடும் என்று கருதினால் ஒழிய, இரண்டு தெலுங்கு மாநிலங்களுக்கு என்ன அவசியம்?" என்று குறிப்பிட்டுள்ளார்.

### ஆர். எஸ். சுக்லா

மத்தியப் பிரதேச முதன் மந்திரி சுக்லா, குழுவின் அறிக்கைப்படி, 'ஒவ்வொருவருக்கும் கேட்டது கிடைத்திருக்கிறது,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

### என். வி. காட்கில்

"பம்பாயை ஒரு இரு மொழி மாநிலம் ஆக்கியதின்மூலம், குழுவினர், 'முதலாளிகளுக்கு ஒரு தாயகம்' அமைத்துத் தந்திருக்கின்றனர்," என்று கூறியுள்ளார்.

## நிதானமின்மையைத்தான் காட்டுகின்றனவாம்!

"மத-வகுப்பு வேறுபாடுகளைத் தூண்டி, மக்களிடையே வெறியைக் கிளப்பி விடுவதற்காக, வேண்டுமென்றே செய்யப்படும் முயற்சிகள், பெருவாரியான எண்ணிக்கையில் வேறு இடங்களுக்குக் குடியேறிவிடுவதாகப் பயமுறுத்துதல், 'குறிப்பிட்ட ஒரு மொழியினருக்குத் தனியான நிர்வாகப் பிரதேசம் கொடுக்கப்படாவிட்டால், அவர்களின் பொருளாதாரம், ஒழுக்கம், வாழ்க்கை ஆகியவை அடியோடு மறைந்து போய்விடும்' என்று பறை சாற்றுதல் போன்ற காரியங்கள் நல்ல சூழ்நிலையும், நிதானமும் இல்லாமையையே காட்டுகின்றன.

"இந்தியா, பெரும் பொருளாதார, சமூக மாறுதல்கள் ஏற்படும் தருவாயில் இப்பொழுது இருக்கிறது. இம்மாறுதல்கள் ஒவ்வொரு நிறுவனத்தையும் பாதிக்கத்தான் செய்யும்; பரம்பரைச் சிந்தனை முறைகளையும், வாழ்க்கை வழிகளையும் அதனால் மாற்றும்படி ஏற்படும். நல்ல வேளையாக நாட்டின் இணைப்புக்கான சக்திகள் ஏற்கனவே வேலை செய்து வருகின்றன."

# பல இடங்களில் பெரும் ஆர்ப்பாட்டம்

## போலீசார் தடியடி, கண்ணீர்ப்புகை பிரயோகம்

*மாநிலக் குழு அறிக்கை எதிரொலி*

பம்பாய், அக். 11—

கம்யூனிஸ்டு கட்சியின் மகாராஷ்டிரக் குழு, 'சம்யுக்த மராட்டியம்' அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள குழுவின் சிபாரிசுக்கு எதிராக நேற்று தொழிலாளரின் கூட்டமொன்று நடத்தியிருக்கின்றனர். கூட்டத்தில், மராட்டியருக்கு குழு பெரும் அநீதி இழைத்திருப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

கூட்டம் முடிந்து திரும்புகையில், தொழிலாளர்கள், தடை உத்தரவையும் மீறி ஊர்வலமாக வந்து கோஷங்கள் எழுப்பியிருக்கின்றனர். அமைதியாகக் கலைந்துவிடுமாறு போலீசார் கூறியது கண்டு, ஊர்வலத்தினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனராம்; கற்களைக் கொண்டு தாக்கியதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. உடனே நிலையைச் சமாளிக்கப் போலீசார் தடியடிப் பிரயோகத்தில் ஈடுபட்டனராம்.

நேற்று, பம்பாய் தொழிலாளர் பகுதி அமைதியற்றிருந்ததாகவும், நகரில் பீதி நிலவியதாகவும், கடைகள் எல்லாம் அடைக்கப்பட்டிருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

போலீசார், ஆலைத் தொழிலாளர் சங்கத் தலைவரான பாபுராவ் ஜகதப் என்பாரைக் கைது செய்துள்ளனராம்.

### ஷோலாப்பூரில்....

அமைக்கப்படவிருக்கிற கர்நாடக மாநிலத்தில் ஷோலாப்பூர் மாவட்டத்தில் உள்ள அகால்கொட் பகுதி சேர்க்கப்படவில்லை என்பதற்காக, நேற்று பெரும் ஆர்ப்பாட்டங்களும் கடை அடைப்புகளும் நடைபெற்றிருக்கின்றன.

கடைகளும், பள்ளிகளும் மூடப்பட்டிருக்கின்றன.

போலீசார் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர். 10 கெஜத்திற்கு ஒரு போலீசார் வீதம் நிறுத்தப்பட்டிருக்கின்றனராம்.

### பெல்காமில்...

பெல்காமை கர்நாடக மாநிலத்தில் இணைப்பதென குழு செய்துள்ள சிபாரிசுகளைக் கண்டிக்கும் முகத்தான் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது ஒரு கூட்டத்தினர், மிக அதிகமான ஜன நெருக்கமுள்ள பகுதி ஒன்றிலிருந்த மாணவர் விடுதி மீது கற்களை வீசி எறிந்து 'கலாட்டா' செய்ததாகச் செய்தி ஒன்று கூறுகிறது; இதன் விளைவாக ஐந்து மாணவர்கள் காயமடைந்தனராம்.

கூட்டத்தைக் கலைக்க போலீசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

பெல்காம், கர்நாடகத்தில் இணைக்கப்பட்டதை ஆதரிக்கும் கன்னடியர்கள், குழுவின் சிபாரிசுகளை ஆதரிப்பதாக, தந்திகள் பலவற்றை, பிரதமர் நேரு, காங்கிரஸ் தலைவர் தேபர் ஆகியோருக்கு அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது.

என்றாலும், மராத்தி பேசும் மக்கள் கடையடைப்பு செய்து ஆர்ப்பாட்டம் நடத்தி, குழுவின் சிபாரிசுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

முன்பு இங்கு, போலீசார் தடியடி, கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்துள்ளனர்.

### பெல்லாரியில்...

பெல்லாரி, அக். 11—

"பெல்லாரியை ஆந்திராவுக்குத் தந்துவிட வேண்டுமென மாநில சீரமைப்புக் குழு செய்துள்ள சிபாரிசு கன்னடியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பெரும் அநீதியாகும்; ஹோஸ்பெட், சிறுகுப்பா, பெல்லாரி தாலுகாக்கள் நூற்றுக்கு நூறு கன்னடியருக்கே சொந்தம்"

என்று கூறி, பெல்லாரி கன்னடியர்கள் இன்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பெல்லாரி நகரில், இன்று நிலைமை மிகுந்த நெருக்கடியானதாயிருந்திருக்கிறது.

ஒரு கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் ஆர்ப்பாட்டமும், ஊர்வலமும் நடத்தி பரீட்சைகளைப் புறக்கணித்திருக்கின்றனர். கல்லூரித் தலையாயர்கூட, உடனே கல்லூரியை மூடி, பரீட்சைகளையும் ஒத்திவைத்திருக்கிறார்.

பெல்லாரி மாவட்டத்தில் பெரும் பகுதியில் முழுவதுமாக, கடையடைப்பு நடத்தப்பட்டிருக்கிறது.

# 1,40,000 பெண் தொழிலாளர்கள்!

### 'வேலை நிறுத்த ஒத்திகை'யில் ஈடுபட்டனராம்!

டோக்கியோவிலுள்ள ஆலைகளை விட்டு வெளியேறி, சுமார் 1 மணி நேரம் வரையில், 1,40,000 பெண் தொழிலாளர்கள் 'வேலை நிறுத்த ஒத்திகை'யில் ஈடுபட்டனராம்! இதனால், 200 ஆலைகள் பாதிக்கப்பட்டனவாம்.

வேலை நிறுத்தம் போன்ற தொழிலாளர் சங்க நடவடிக்கைகளில், பெண் தொழிலாளர்கள் பின் தங்கி இருப்பதாகவும், அவர்களை இம்மாதிரியான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்குத் தயார் செய்யவே இந்த 'வேலை நிறுத்த ஒத்திகை' மேற்கொள்ளப்பட்டதாகவும்காரணம்கூறப்பட்டுள்ளது; அன்றியும், 10 சதவிகித சம்பள உயர்வு கோருவதின் அறிகுறியாகவும் இந்த 'வேலை நிறுத்தம்' கையாளப்பட்டதாம்.

புவனேஸ்வரம், அக். 11—

ஒரிசா மந்திரி சபைமீது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று தோற்றது. சட்டசபையில், தீர்மானத்திற்கு ஆதரவாக 45 வாக்குகளும், எதிராக 76 வாக்குகளும் கிடைத்தன.

# திட்டங்களை நிறைவேற்றுவது......

### 'தொழிலாளர் கூட்டுறவு நிறுவன பொறுப்பில் விடப்படும்

**திட்ட மந்திரி தகவல்**

பாட்னா, அக் 10—

தேசிய திட்டங்களைப் பொறுத்த வரை எல்லா வேலைகளையும் கூடுமான வரை தொழிலாளர் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமே நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக திட்ட மந்திரி நந்தா தெரிவித்திருக்கிறார்.

இதன் மூலம் 'காண்டிராக்ட்' முறை ஒழிந்துவிடும் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

### வெறிச்செயலின் விளைவு

சவந்த்வாடி, அக். 10—

சமீபத்தில், போர்ச்சுகீசியப் போலீசார், நான்கு பெண்களைக் கைது செய்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்; அவர்களில் ஒருவர், கர்ப்பமுற்றிருந்தாராம்; கடுமையான காயத்தின காரணமாக, அப்பெண்மணிக்குக் 'குறையான பிரசவம்' ஏற்பட்டு, குழந்தையும் இறந்த நிலையில் பிறந்ததாம். அவரது நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறதென்றும் கூறப்படுகிறது

### விற்பனை வரி: மத்திய சர்க்கார் சட்டமியற்றும்

பாட்னா, அக். 10—

இந்திய நிதி மந்திரி சி. டி. தேஷ்முக், பீகார் வர்த்தகக் குழுவில் பேசுகையில் வரி விசாரணைக் குழுவின் அறிக்கையை தாம் இன்னமும் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்

விற்பனை வரிக்கு மத்திய சர்க்காரே சட்டமியற்றக்கூடும் என்று அவர் சூசகமாகத் தெரிவித்தாராம்.

### தென் பகுதி இரயில்வேமென் யூனியன்

★

13—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை—சைதாப்பேட்டை, எண் 95, கடைத்தெருவில், தென் பகுதி இரயில்வேமென் யூனியன் சென்னை கிளையின் பொதுக் குழு, மத்திய சங்கத் தலைவர் தோழர் சி. இராகவானந்தம் தலைமையில் நடைபெறும்.

# 'பதவியினின்று ஓய்வு பெறப்போவதில்லை'

**மாலடோவ் அறிவிப்பு**

மாஸ்கோ, அக். 10—

"நான் பதவியிலிருந்து விலகுவது என்ற பிரச்சினையே இல்லை," என்று சோவியத் வெளி விவகார மந்திரி மாலடோவ் தெரிவித்திருக்கிறார்.

கனடா வெளி விவகார இலாகா மந்திரி லெஸ்டர் பியர்சன் என்பாருக்குத் தான் தந்த விருந்து ஒன்றின்போது, பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்திருக்கிறார்.

### யுத்தங்கள் மூளுவதற்குக் காரணம் என்ன?

1958 ஏப்ரலுக்குள், சுமார் ஒரு இலட்சம் படைகளை, பிரிட்டனும் குறைத்துக் கொள்ளக்கூடும்; இத்துடன், படைகளின் மொத்தக் குறைப்பு சுமார் 7 இலட்சமாகும்.

இதை அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர், மத்தியக் கிழக்கு நிலைமை மிக்க மோசமான கட்டத்தை அடையும் நிலையில் உள்ளதென்றும், இதனால், பெரும் ஆபத்தான விளைவுகள் ஏற்படக்கூடுமென்றும், பலமிக்கவன் முதலில் தாக்குவதற்கு ஊக்குவிக்கப் படக்கூடுமென்ற அபாய நிலைமை உள்ளதென்றும், இவ்வித நிலைமைகளினாலேயே அடிக்கடி யுத்தங்கள் மூண்டுவிடுகிறதென்றும் குறிப்பிட்டார்.

# புதிய மாநில அமைப்புகள்

## அடுத்த ஆண்டிலேயே அமுலுக்கு வரும்?

புதுடில்லி, அக் 11—

மாநில புனரமைப்புக் குழு செய்துள்ள சிபாரிசுகளின்படி புதிய மாநிலங்கள் அடுத்த ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதி முதல் அமுலுக்கு வருமென இந்தியப் பேரரசு தீட்டியுள்ள பூர்வாங்கத் திட்டத்திலிருந்து தெரியவருகிறது.

எதிர்பார்க்கிறபடி புதிய மாநிலங்கள் அமைவது நடைபெறுமானல், அடுத்த பொதுத் தேர்தல் ஒத்திப் போடப்படமாட்டாது என்றும், 1957 பிப்ரவரி, ஏப்ரல் திங்கள்களுக்கிடையில் தேர்தல்கள் நடத்தப்படும் என்றும் தெரியவருகிறது.

அடுத்த திங்களுக்குள் மாநிலச் சட்டசபைகள், முக்கிய அரசியல் கட்சிகள், மற்றும் பொதுமக்கள் கருத்துக்கள் எல்லாம் திரட்டப்பட்டுவிடும் என்றும், நவம்பர் 21-ந் தேதி துவக்கவிருக்கும் மக்கள் சபைக் கூட்டத்தில் குழுவின் அறிக்கை விவாதிக்கப்படும் என்றும், அங்கு தெரிவிக்கப்படும் கருத்தை ஒட்டி இந்தியப் பேரரசு முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது.

உத்தேசிக்கப்படுகிற மாறுதல்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வேண்டி, அரசியல் சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் நகல் மசோதா தயாரித்து, அதனை எல்லை மாறும் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பிவைக்கப்படும் என்றும், பிறகு மசோதா, 1956 ஏப்ரல் திங்களில் நிறைவேற்றப்படும் என்றும் தெரியவருகிறது.

அதற்குப் பிறகு தொகுதி நிர்ணயக் குழு நியமிக்கப்பட்டு, அது இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் தன் வேலையை முடித்துவிடும் என்றும் நம்பப்படுகிறது.

அடுத்த ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் புது மாநிலங்கள் அமைந்தும் அவைகளின் சட்டசபைகள், அதனதன் எல்லை மாறுதல்களை ஒட்டி உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

உதாரணமாக, சென்னை சட்டசபைக்கு தென்கன்னட, மலபார் மாவட்டங்களிலிருந்தும், கொள்ளேகாலம் தாலுகாவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டசபை உறுப்பினர்கள், இடைக்கால சென்னை சட்டசபையில் இருக்கமாட்டார்கள்; திரு-கொச்சியிலிருந்து சென்னையுடன் இணைக்கப்படும் தாலுகாக்களைச் சேர்ந்த உறுப்பினர்கள்தான் சென்னை சட்டசபையில் இடம் பெறுவர்; இதை ஒட்டி, புதிய மாநில மந்திரி சபைகளும் மாற்றியமைக்கப்பட வேண்டியிருக்கும்

இறுதி வாக்காளர் பட்டியல் 1956 அக்டோபர் திங்களில் வெளியாகிவிடும்; நவம்பர் திங்கள் முடிவில் அபேட்சைப் பத்திரங்கள் தாக்கல், பரிசீலனை, அங்கீகாரம் முதலியன முடிந்துவிடும்; அபேட்சகர்கள் வாக்குச் சேகரிப்பதற்கான வேலைக்கு இரண்டு திங்கள் அவகாசம் கிடைக்கும்; பிறகு தேர்தல் 1957 பிப்ரவரி, ஏப்ரல் திங்கள்களுக்கிடையில் நடைபெறக்கூடும்.

# நகரசபை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு!

சென்னை, அக். 11—

சென்னை நகரசபையில் பணியாற்றும் குமாஸ்தாக்களுக்கு சம்பள உயர்வு தருவதென நகரசபை முடிவு செய்திருக்கிறது.

மேயர் எம் ஏ. சிதம்பரம் தலைமையில் நடைபெற்ற சபைக் கூட்டத்தில் வரி விதிப்பு நிதி நிரந்தரக் குழு, சம்பள உயர்வு பற்றிச் செய்திருந்த சிபாரிசு சில திருத்தங்களுடன் இன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

சம்பள உயர்வு 519 பேர்களுக்கு பயன்தரும்; இதனால், நகரசபைக்கு ஆண்டு தோறும் ரூ. 2,73,000 அதிகச் செலவாகும்; புதிய சம்பள விகிதம் இத்திங்கள் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வரும் என்று தெரியவருகிறது.

ஊழியர்களுக்கு, அடிப்படைச் சம்பளத்தில் ரூ. 5 அதிகம் தரப்பட்டிருக்கிறது.

### பயமும்-பாசமும்!

ராஜ்கோட், அக். 10—

தன்னைக் கொலை செய்யப்போவதாக தன் மகன் பயமுறுத்தினன் என ஹிராஜி பாய் என்பவர் மகன் மீது கோர்ட்டில் கிரிமினல் வழக்கு தொடர்ந்தார்.

தன் புகாரின்மீது, போலீசார் தன் மகனை கைது செய்ய நேரிட்டால், ஜாமீன் கட்டுவதற்குப் பணமின்றி மகன் கஷ்டப்படுவானே எனக்கருதிய அந்தத் தந்தை, முன் கூட்டியே ரூ. 25 மகனுக்கு அனுப்பி வைத்திருந்தாராம். போலீஸ் விசாரணையின்போது இது தெரியவந்தது.

### திராவிட மொழிகள் ஆராய்ச்சி

அண்ணாமலைநகர், அக். 10—

அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் திராவிட மொழிகள் பற்றிய ஆராய்ச்சி நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும்.

பல்கலைக் கழகத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி, இந்தியப் பேரரசு வழங்கியுள்ள மானியமான ரூ. 3 இலட்சம் தொகையைக் கொண்டு இந்த ஆராய்ச்சி நடத்தப்படும் என்று தெரிகிறது.

கல்வி மந்திரி சுப்பிரமணியம், அக். 15-ந் தேதியன்று கீழ்க்கண்ட ஆராய்ச்சிப் பிரிவுகளை ஆரம்பித்து வைப்பார் என்று தெரிகிறது.

(1) திராவிட மொழிகளின் ஆராய்ச்சி; (2) திருக்குறள், திருமந்திரம் ஆராய்ச்சி; (3) கம்ப இராமாயண ஆராய்ச்சிப் பதிப்பு வெளியிட நிபுணர் குழு அமைத்தல்; (4) மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசனாரின் 'கௌடில்யர் அர்த்த சாஸ்திரம்' தமிழ் மொழிபெயர்ப்பைப் பிரசுரித்தல்—ஆகியவை நடைபெறும் என்றும் தெரிகிறது.

# ஈராக் - துருக்கி ஒப்பந்தம்!

### ஈரானும் சேருகிறது!

ஈராக்-துருக்கி தற்காப்பு ஒப்பந்தத்தில் சேருவதென முடிவு செய்திருப்பதாக ஈரான், ஈராக் சர்க்காருக்கு அறிவித்திருக்கிறதாம்.

இந்த ஒப்பந்தத்தில் பிரிட்டனும், பாகிஸ்தானும் முன்னமே சேர்ந்துள்ளன.

மேற்கு ஆசியாவின் பாதுகாப்பு, சமாதானம் ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கெனக்கூறி இந்த ஒப்பந்தம் 5 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எகிப்து, இந்த கூட்டு அமைப்பில் சேர மறுத்துவிட்டிருக்கிறது.

### 4,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

கொல்லம், அக். 11—

மக்கள் சபை உறுப்பினரான ஸ்ரீகண்டன் நாயர் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், கொல்லம்—அதன் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்த 4,000 தொழிலாளர்கள், இன்று ஒரு நாள் மட்டும் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர். அவர்களனைவரும் ஊர்வலமாகச் செல்லுகையில், குழந்தைகளுடன் பல பெண் தொழிலாளர்களும் கலந்து கொண்டனராம்; பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், சர்க்காரின் தொழில் கொள்கையைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட மக்கள் சபை உறுப்பினரை விடுவிக்கக் கோரியும் பலர் பேசினர்.

சென்னை, அக் 12—

இதுவரையில் நிறைவேற்றப்பட்டுள்ள சேரி அபிவிருத்தி வேலைகளுக்காக, நடப்பு ஆண்டில், சென்னை நகர சபைக்கு, சென்னை சர்க்கார் ரூ. 6,61,250 மானியமாக அளிப்பதற்கு அனுமதித்துள்ளனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ.